Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1	சௌமிய௵ ஆடி௴ 1௳	Part. 4
புத்தகம். 1	1909௵ ஜூலை௴ 16௳	பிரதி. 4

Contents

Rotation of Crops ... 49
Sorghum poisoning by Mr. V. P. Subramania Mudaliar, G.B. V.C. Veterinary Inspector ... 56
Trichy agricultural Association 57
An Agricultural Exhibition in Travancore 59
Correspondence 60
Month's operations ... 62
News & Notes ... 64

பொருளடக்கம்

பயிற்மாற்றல் 49
சோளப்பயிர் தின்று மாடுகள் சாகுதல் ம-ா-ா-ஸ்ரீ வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஜீ. பி. வி. ஸி. வெற்றரினெரி இன்ஸ்பெக்டர். 56
திருச்சிவிவசாய சங்கம். 57
திருவாங்கூர் விவசாயக்காக்ஷி. 59
கடிதம். 60
மாதப்பருவங்கள் ... 62
குறிப்புகள் 64

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12

Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by

J. R. RANGARAJU,

5, Mount Road, Madras

[*All Rights reserved*]

WORLD RENOWNED SINGERS SEWING MACHINES.

விவசாயக்காரர்களுக்கு முக்கிய அறிவிப்பு

வயல்களில் வேலையற்றிருக்கும்போது காலத்தை வீணுகக்கழிக்கவேண்டாம். உலகப்பிரசித்தியுள்ள எங்கள் தையல்மெஷின்களை வாங்கி காலத்தை நன்ருய்ப்போக்குங்கள். இலாபமுண்டு. மாதம்மாதம் கொஞ்சபணம் கட்டி வாங்கலாம். ரொம்ப சுலபம். மிகவும் உறுதியானது. நீடித்துநிற்கும். உபயோகிக்கும்விதம் கற்றுக்கொடுக்கிருேம். பழுதில்லாமல் பார்த்துக் கொள்ளுகிருேம். சகல சாமான், ஊசி, நூல், எப்போழும் தயாராயிருக்கும். விலை ஜாபிதாவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சிங்கர் மானிபாக்சரிங் கம்பெனி

பிரதான ஆபீஸ்:—179, மவுண்ரோட் சென்னை. கிளையாபீஸ்கள்:— பெங்களூர், கோயமுத்தூர், குண்ணூர், கடலூர், கடப்பை, ஹிந்துபூர், கரூர், மதிராஸ்டவுன், மதுரை, மடிகரை, மைசூர், இராபர்ட்சன்பேட்டை, சேலம், ஹிமுகா, திருநெல்வேலி, திருவனந்தபுரம், வேலூர் முதலியன.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷ பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரையமும் அச்சுக்கூலியும் தபால் சிலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 / புத்தகம் 1 — சௌமிய௵ ஆடி௴ 1௳ / 1909௵ ஜூலை௴ 16௳ — No. 4 / பிரதி 4

பயிர்மாற்றுதல்

ROTATION OF CROPS

நமது இராஜதானியிலுள்ள கைப்பற்றுநிலங்கள் முன்னிலும் இப்போது அதிக வளமடைந்திருக்கின்றனவா? அல்லது வளங்குன்றிக்ஷீணித்திருக்கின்றனவா? என்னும் விஷயத்தைப்பற்றி யோசிக்கும்போது அநேக காரணங்களால் நமது நிலங்கள் வரவர க்ஷீணித்துக்கொண்டே வருகின்றனவென்றே தீர்மானிக்கவேண்டும். அநேக கிராமங்களில் இப்போது ஜீவனுடனிருக்கும் வயதுசென்ற கிருஷிகரை நாம் விசாரிக்கும்போது, 50-வருஷங்களுக்கு முன் நமது நிலங்களில் தற்காலம் விளைவாகும் மாசூல் அளவில் $1\frac{1}{2}$-மடங்கு மாசூல் விளைந்துவந்ததாகவும், அது நாளாவர்த்தியில் குறைந்துபோனதாகவும் சொல்வார்கள். அநேகர் இவ்விஷயத்தில் திட்டமான சாக்ஷியம் இல்லையென்று சொல்வார்கள்; என்றாலும் சர்க்கார் செட்டில்மெண்டு ஆபீசர்களும்கூடத் தங்கள் விசாரணையில் நிலங்கள் க்ஷீணமடைந்திருப்பதாகவே எல்லாரும் சொல்வதாக அநேக ஜில்லாக்களில் எழுதியிருக்கிறார்கள். அனேக ஜில்லாக்களில் புன்செய்நிலங்களை ஒன்றிரண்டுவருஷங்களுக்கு சாகுபடி செய்து பின்னால் அவைகளை இராஜிநாமாக் கொடுத்துவிட்டு, தீர்வைத்தரிசாயிருந்த நிலங்களையும், சிலவருஷங்களுக்கு முன்இராஜிநாமாகொடுத்த நிலங்களையும் குடிகள் தர்க்காஸ்த்தில் ஏற்றுபயிரிட்டு

வரும் வழக்கமே நமது நிலங்கள் வரவர க்ஷீணமடைவதை நிரூபிக்கின்றது. மேலும் ஸர் F. A. நிக்கல்சன் துரையவர்களும் கோயம்புத்தூர் ஜில்லா ஈரோடு உடுமலைப்பேட்டைத் தாலூகாக்களிலுள்ள புன்செய் நிலங்களைப்பற்றி அதே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்.

கிருஷி நடத்துவதில், "நிலத்தினின்று விளைபொருள் ரூபமாக எடுக்கப்பட்ட வஸ்துக்களை மறுபடியும் எந்த ரூபமாயாவது நிலத்தில் போட்டாலொழிய அதிலுள்ள பயிருணவு நாளுக்குநாள் தீர்மானமாய்க் குறைவுபடும்" என்பதும், "அப்படி ஏற்படும் குறைவைப் பூர்த்திசெய்யவில்லையானால் அந்நிலத்தில் சாதாரணமாய் விளைந்து வரும் பயிர்கள் கொஞ்சக்காலத்துக்குள் சரியான விளைவுதராது" என்பதும் எல்லாருக்கும் தெரிந்த முக்கியப் பிரமாணமாகும். நமது தேசத்திலிருந்து வருஷா வருஷம் கோதுமை, பருத்தி முதலான அனேக விளைபொருட்கள் இலட்சக்கணக்காய் அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. மேலும் நிலங்களுக்கு எருவாக உபயோகப்படக்கூடிய எலும்புகளும் பலதினிசுப் புண்ணாக்குகளும் வருஷாவருஷம் நமது தேசத்திலிருந்து வெளியே கொண்டு போகப்படுகின்றன. தொழு எருவில் சேரவேண்டிய மாட்டுச் சாணியை வறட்டிதட்டி விறகுக்குபதிலாக எறித்துவிடுகிறார்கள். மனிதர்கள் உண்ட தானியம் ஜீரணித்தபின் கழிவாகும் மலமூத்திரங்களை சரியானபடி சேகரித்து அந்த தானியம் விளைந்த நிலத்தில் திரும்பக் கொண்டுபோய்ப் போடுவதில்லை. கால்நடைகளின் சிறுநீரைச் சேகரித்து நிலங்களில் கொண்டுபோய்ச் சேர்க்க யாதொரு முயற்சியும் நமதுகிருஷிகர் செய்வதில்லை. இப்படி எல்லாவிதத்திலும் நமது நிலங்கள் செழிப்படையக்கூடிய மார்க்கங்கள் அடைபட்டுப்போயிருக்கின்றன. அப்படியிருக்க, வருஷா வருஷம் அந்நிலங்களைப் பயிரிட்டு அவைகளிலுள்ள பயிருணவை விளைபொருள்ரூபமாக அறுவடைசெய்து வெளியாக்குவது மட்டும் இடைவிடாமல் நடந்துவருகிறது. இப்படியிருந்தால் நமது நிலங்கள் வளங்குறைந்து க்ஷீணித்துப்போகாமல் எப்படி முன் போலவே செழித்திருக்கக்கூடும்?

நிலங்கள் நாளுக்குநாள் வளங்குறைந்து போகின்றனவென்னும் விஷயத்தைத் தீர்மானிக்க இந்ததேசத்தில் தொடர்ச்சியாய்ப் பல வருஷங்களுக்கு யாதொரு பரீக்ஷையும் நடத்தப்படவில்லையாயினும், இங்கிலாந்தில் ரோதாம்ஸ்தெட் பரீக்ஷைப்பண்ணையில் 1844-வருஷம் முதற்கொண்டு நாளதுவரையிலும் இடைவிடாமல் இவ்விஷயத்தில் பரீக்ஷை நடத்திவந்திருக்கிறார்கள். ஒரேநிலத்தில் எருவென்பதே உபயோகிக்காமல் வருஷாவருஷம் கோதுமைத்தானியப்பயிரையே தொடர்ந்து விதைத்துவந்ததில், 1844-ம் ஹும் முதல் 1851-ம் வருஷம்வரை 8-வருஷங்களுக்கு சராசரி எக்கர் ஒன்றுக்கு 17-புஷல் கோதுமை விளைந்ததாகவும், 1852-ம் வருஷ

முதல் 1871-ம் வருஷம்வரைக்கும் சராசரியில் வருஷம்ஒன்றுக்கு 13-புஷல் விளைந்ததாயும் 1872-ம்வரு முதல் 1891-ம் வருஷம் வரை சராசரியில் வருஷம் ஒன்றுக்கு 11 புஷல்தான் விளைந்ததாயும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால் சாதாரணமாக நிலங்களின் வளம் நாளாவர்த்தியில் குறைவுபடுகிறதென்பது திட்டமாய் வெளியாகும்.

ஒருநிலத்தின் செழுமை அதிலுள்ளபயிருணவுப்பொருட்களால் அதற்கு ஏற்படுகின்றது. மண்ணிலுள்ள பயிருணவுப்பொருட்கள் (1) உடனே பயிர்களுக்கு உபயோகமாகும் வஸ்துக்களென்றும், (2) நாட்கழித்துப் பயிருணவாகும் பொருட்களென்றும் இரண்டு வகைப்படும்.

இரும்பு ஒரு உலோகவஸ்து. அது நாட்கழித்துப்பயிருணவாகும் பொருள். அது அயசிந்தூரமாகும்போது தண்ணீரில் கரையும். அப்போது உடனே பயிர்களுக்கு உபயோகமாகும் வஸ்துவாகும். நிலவளம்மிகுந்த இடத்தில் ஒரு எக்கர் விஸ்தீரணத்தில் 9-அங்குல ஆழத்துக்குள்ள மண்ணை வெட்டியெடுத்துக் காயவைத்து நிறுத்துப்பார்த்தால் சுமார் 3,000,000 இராத்தல் நிறையுள்ளதாயிருக்கும். அதில் பயிர்களுக்கு உடனே உபயோகமாகும் போட்டாஷ் என்னும் சாம்பல்காரம் 120-இராத்தலும், பாஸ்பாரிக் ஆசிட் என்னும் பிரகாசிதாமிலம் 900-இராத்தலும், நைட்ரோஜன் என்னும் உப்புவாயு 1000-இராத்தலும் தான் இருக்கும். ஒரு கோதுமைப் பயிர் அந்நிலத்தில் விளைவித்து அறுவடைசெய்தால், 9-இராத்தல் பிரகாசிதாமிலமும், 15-இராத்தல் சாம்பல்காரமும் 36-இராத்தல் நைட்ரோஜனும் அந்நிலத்தினின்று அப்புறப்படுகிறது. உடனே உபயோகப்படக்கூடியவும், சிலநாட்கழித்து உபயோகமாகக் கூடியவும் ஆக இருவகையான போட்டாஷ், பிரகாசிதாமிலம், நைட்ரோஜன் என்னும் பதார்த்தங்கள் ஒரு எக்கரிலுள்ள 9-அங்குல ஆழ மண்ணில் 3000-இராத்தலுக் குட்பட்டுத்தானிருப்பதாக ரசாயன பரீக்ஷையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால் எவ்வகையான எருவும நிலத்திலிடாதிருக்கும் பட்சத்தில்,நிலத்தைச்சரியாய் உழுது பண்படுத்திவந்தால், அந்நிலத்திலுள்ள மேற்சொன்ன பயிருணவுப் பொருட்கள் 300-தரம் கோதுமைப்பயிர் விளைவிக்கத்தான் போதுமானதாயிருக்கும். அதற்குப்பின் கோதுமையாவது நெல் முதலான மற்ற விசேஷ உணவுதானியங்களாவது அதில் விளையாது. இவ்விதமாக 300-வருஷங்களுக்குள் நிலம் கெட்டுத் தாழ்வடையாமல் காக்கும்பொருட்டு வருஷாவருஷம் அதற்கு நேரிடும் பயிருணவு நஷ்டத்தைப் பூர்த்திசெய்ய எருவிடுதல் முக்கியமானது. ஆனால் நாம் முன்சொன்ன பலகாரணங்களையிட்டு நிலத்தினின்று

நாம் அப்புறப்படுத்துகிற வஸ்துக்களுக்குச் சரியான பயிருணவுப்பொருட்கள் அடங்கிய எருவை அந்நிலத்துக்கிட நம்மால் முடியாது. எத்தனையாயிரம் இராத்தல் நிறையுள்ள விளைபொருட்கள் நமது தேசத்தைவிட்டு வெளியே போய்விடுகின்றன? அவைகளுக்குத் தக்க எரு எங்கிருந்து நாம் சம்பாதிப்பது? இதற்காகவே இயற்கை எருக்களுடன் செயற்கை எருவகைகளையும் உண்டாக்கி உபயோகிக்கவேண்டியது அவசியமாகிறது. இதற்குச்செல்லும் பணச்செலவு அதிகம்.

நிலத்துக்கு வருஷாவருஷம் நேரிடும் நஷ்டத்தை "பயிர்மாற்றல்" என்னும் முறையால் கூடியஅளவு குறைக்கலாம். எப்படியென்றால் சிலபயிர்கள் சிலவகையான பயிருணவை விசேஷமாக உட்கொள்ளும். உதாரணமாக கோதுமை, நெல்முதலிய கதிர் தானியப்பயிர்களுக்கு நைட்ரோஜன், பிரகாசதாமிலம், என்னும் உணவுப் பொருட்கள் விசேஷமாய் அவசியமாகும். துவரை, உளுந்து முதலிய காய் தானியப்பயிர்களுக்கு சுண்ணும்பு முக்கியமாய் அவசியமாகும். ஆகையால் வருஷாவருஷம் கதிர் தானியப்பயிர்களையே ஒரு நிலத்தில் விளைவித்துக்கொண்டிருந்தால் அதிலுள்ள நைட்ரோஜன், பிரகாசதாமிலப்பொருட்கள் சீக்கிரத்தில் குறைவுபடும். அப்படி செய்யாமல் ஒருவருஷம் கதிர் தானியப்பயிரும் மறுவருஷம் காய்தானியப் பயிரும் விளைவித்தால் ஒருவகையான பயிருணவே அதிகமாய்ச் செலவழியாமல் எல்லாவிதமான பயிருணவுகளும் முறைமுறையே சரியாய்ச் செலவாய்க்கொண்டுவரும். மேலும் ஒருவருஷத்துக்கும் மற்றொரு வருஷத்துக்கும் இடையில் காற்று, ஜலம், உஷ்ணம் இவைகளின் சம்பந்தத்தால் நிலத்திலுள்ள பயிருணவுப்பொருட்கள் தண்ணீரில் கறைவுபடாத கடினமான ஸ்திதியிலிருந்து தண்ணீரில் கறைவுபடும்படியான மிருதுவான ஸ்திதிக்கு மாறி பக்குவமடைகின்றன. வருஷாவருஷம் ஒரேபயிரை விளைவித்தால் அதற்கு வேண்டிய பயிருணவு சரியான அளவுக்கு பக்குவப்படுவதற்கு அவசியமான காலமில்லாமல் போகின்றது. பயிர் மாற்றுவதால் வேறு சில அநுகூலங்களுமுண்டு.

1. அவுரி, பருத்தி முதலிய சில பயிர்களுக்கு ஆழமாய்ப் போகக்கூடிய வேர்களுண்டு; ஆகையால் அந்தப்பயிர்கள் ஆழத்திலுள்ள பயிருணவையே முக்கியமாய் அருந்துகின்றன. ஆனால் நெல், கேழ்வரகுமுதலிய பயிர்களுக்கு மேற்பரப்பில் வியாபிக்கும் கொத்துவேர்கள்தான் உண்டு; அவைகள் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள உணவை அருந்தும். இவ்விரண்டுவகைப் பயிர்களையும் மாறி மாறிச் சாகுபடிசெய்தால் நிலத்தின்மேல்மண்ணிலும், அடிமண்ணிலுமிருக்கும் பயிருணவு சரியாய்ப் பக்குவப்பட்டு செலவாகும்.

2. சிலபயிர்கள் சாகுபடிசெய்யும்போது ஒருவகையான பூச்சிகளுண்டாகிஅவ்விலைகளைத் தின்று பலுகிப் பெருகுகின்றன. வருஷா

வருஷம் அதேபயிரைச் சாகுபடிசெய்தால், அந்தப்பூச்சிகள் அதிகமாக விருத்தியடைந்து அதிகமான கெடுதியையுண்டாக்கும். அப்படிச்செய்யாமல் மறுவருஷம் வேறு தினிசுப்பயிரைச் சாகுபடி செய்தால் அந்தப் பூச்சிகள் உற்பத்தியானாலும் அவைகளுக்கு வேண்டிய ஆகாரம் அகப்படாததால் உடனே அழிவடையும். இவ்விதமாகப் பயிர் மாற்றுவதால் பயிர்களுக்கு நேரிடும் நோய் நொடிகளை மாற்றலாம்.

3. மேலும் பருத்திமுதலான சிலபயிர்களைச் சாகுபடிசெய்யும்போது களைகள் தாராளமாயுண்டாகிப் பறவுகின்றன. ஆனால் காணம் (கொள்ளு) முதலான சில தினிசுப்பயிர்களிடும்போது, அவைகள் வளர்ந்து நிலத்தில் பரவி மூடிக்கொள்வதால் களைகள் பரவமார்க்கமில்லாமல் போகிறது. முன்சொன்ன பயிர்களையே வருஷா வருஷம் ஒரேநிலத்தில் சாகுபடி செய்துவந்தால் அந்நிலத்தில் இரண்டு மூன்று வருஷங்களில் களைகள் நிறைந்துபோகும். அவைகளை அப்புறப்படுத்த அதிகமான பொருட்செலவும் தொந்தரவும் உண்டாகும். பயிர் மாற்றுவதால் இவ்விதமாய்க் களைகள் அதிகப்படாமல் காக்கலாம்.

4. கரும்பு புகையிலை முதலான சிலபயிர்களுக்கு சில பயிருணவுகள் அதிகமாய் அவசியமாகும். மேலும் அவ்வுணவுப்பொருட்களை அப்பயிர்கள் வெகு சீக்கிரத்தில் உட்கொள்ளும். இரண்டுமூன்று வருஷங்களுக்குத் தொடர்ந்து அதேபயிர்களை ஒரு நிலத்தில் சாகுபடிசெய்தால் நிலம் அதிக க்ஷீணமடைந்து சரியான விளைவைக் கொடுப்பதில்லை. ஆகையால் மேற்சொன்ன பயிர்கள் அருவடையானவுடன் நிலத்துக்கு அதிகப்பயிருணவு நஷ்டமுண்டாக்காத வேறு தினிசுப் பயிர்களைச் சாகுபடிசெய்வது உத்தமம்.

5. இவ்விதமாகப் பயிர் மாற்றுவதால் ஒரு கிருஷிகனுக்குள்ள நிலங்கள் முழுவதிலும் ஒரே தினிசுப்பயிர்களே நிறைந்திருக்காமல் அநேகதினிசுப்பயிர்கள் கலந்திருக்கும். இப்படியிருப்பதில் அதிக மழையினாலாவது, மழைக்குறைவினாலாவது, ஒரு பயிருக்குக் கெடுதிநேரிட்டால், வேறொரு தினிசுப்பயிராவது விளையும்.

6. இதுவன்றி கிருஷிகருக்கு வேண்டிய உணவுப்பொருட்களுடன், கால்நடைகளின் ஆகாரத்துக்கு அவசியமான பயிர்களும் சாகுபடிசெய்ய ஹேதுவுண்டாகும். மேலும் ஏககாலத்தில் ஒரே பயிருக்கு பருவம் செய்யவேண்டியதாய் நேரிடாமல் வருஷம்முழுவதிலும் சாவகாசத்தில் பல பயிர்களுக்குப் பருவம் செய்யக்கூடிய சௌகரியம் ஏற்படும்.

7. பருத்தி பயிரிடும் வருஷத்தில் அந்நிலத்திற்கு எருவிடவேண்டிய அவசியமில்லை. அப்படி எருவிட்டால் இலை தழை அதி

கமாவதேயன்றி பஞ்சு அதிகமாக வெடிப்பதில்லை. ஆகையால் சோளம் அல்லது கம்புபயிர் செய்யும்போது அந்நிலத்துக்கு எரு விட்டால் மறுவருஷம் எருவிடாமலே பருத்திப்பயிர் சாகுபடி செய்யலாம். இவ்விதமாகப் பயிர் மாற்றுவதால் எருவிடுவதில் ஏற்படும் செலவும் குறைவாகும்.

8. சிலபயிர்கள் அருவடையாகுமுன் அவைகளின் இலைகள் உதிர்ந்து மண்ணில் கலந்து அடுத்துச்செய்யும் பயிருக்கு எருவாகும். சடம்பு பயிர்செய்த நிலத்தில் உடனே நெல்பயிர் நன்றாய் உண்டாகும். உழுந்துப் பயிர் அருவடையான நிலத்தில் கேள்வரகு நேர்த்தியாய் உண்டாகும். கடலை அருவடையான நிலத்தில் பருத்தி நன்றாய் உண்டாகும். இந்தப்பயிர்களை மாறிமாறிச் சாகுபடிசெய்யலாம்.

9. நம்முடைய அநுபோகத்தில் ஒருநிலத்தில் வழக்கமாய்ச் சாகுபடி செய்யப்படாத ஒரு நூதனப்பயிரை ஒருமுறை சாகுபடி செய்தால் அது ஜாஸ்தியான மாசூல்தருவதைக் கண்டிருக்கிறோம். எப்போதும் உருளைக்கிழங்கு சாகுபடிசெய்யப்படாதநிலத்தில் அதை நூதனமாகச் சாகுபடி செய்யும்போது அதின்விளைவு மிகவும் அதிகமாயிருந்ததாகப் பெங்களூர் முதலான இடங்களிலுள்ள பலருடைய அநுபோகத்தில் தெரிந்திருக்கும். ஆகையால் இடையிடையே ஒரு நூதனப்பயிரைச் சாகுபடி செய்வது பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

10. ஒரு நிலத்திலுள்ள பயிருணவுப் பொருள்களில் சிலது வழக்கமாய் செலவானதுபோக மற்றவைகள் நாளாவர்த்தியில் செலவாகாமல் நிலத்தில் தங்கி இருப்பாயிருந்துகொண்டேயிருக்கும். அவைகள் ஒரு விசேஷப் பயிரின் சரியான விளைவுக்குப்போதுமானதாயிருக்கும். ஒருவேளை மறுபடியும் அந்தப்பயிர் உடனே சாகுபடி செய்தால் அதன் விளைவுக்கு வேண்டிய உணவுப்பொருட்கள் அந்நிலத்திலில்லாமல்போனாலும் போகலாம். ஆகையால் பயிர்மாற்றுதல் அதிக அவசியம். வெகுகாலம் கொள்ளுமுதலான பயறுதினிசுகள் சாகுபடி செய்துவந்த மிகக்கேவலமான மணல் செவ்வல்நிலத்தில் ஒருமுறை கோதுமை விதைத்தபோது அது விளைவாகிச் சரியான மேனியுந்தந்தது. அந்தக்காரணத்தையிட்டு அந்நிலத்தில் உடனே மறுபடியும் கோதுமைவிதைத்தால் சரியான மேனிகாணுவதில்லை; ஆகையால் அதில் பயிர்மாற்றவேண்டியது அவசியம்.

இப்படி அநேக காரணங்களால் பயிர்மாற்றுதல் என்னும் முறையை அநுஷ்டிக்கவேண்டியது அவசியமென ஏற்படுகிறது. இப்படிப் பயிர்மாற்றுவது ஒரு பிரமாணத்தை யநுசரித்தே யிருக்கவேண்டும். நிலத்தின் தன்மையையும் அவ்வவ்விடத்தின் மழையளவு, காலஸ்திதி முதலிய விஷயங்களையும் உத்தேசித்து இன்னி

ன்ன பயிர் இன்னின்ன உணவை விசேஷமாய் உட்கொள்ளுகின்றது என்பதையும், நிலத்தின் வளத்துக்கு அவசியமான வஸ்துக்கள் இன்னவையென்றும் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கவிதமான பயிர்களை வரிசையாய் விதைப்பதற்காகக் குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். உதாரணமாக.—

முதல் வருஷம்—முதலடி எள்; தாளடி சோளமும் பருத்தியும்.

இரண்டாம் வருஷம்—முதலடி முன்வருஷம் விதைத்த பருத்தி நிலைபயிர்; தாளடி கடலை.

மூன்றாம் வருஷம்—முதலடி கம்பு; தாளடி அவுரி.

நான்காம் வருஷம்—முதலடி முன்வருஷத்து அவுரி நிலைபயிர்; தாளடி கேள்வரகும் துவரையும்.

ஐந்தாம் வருஷம்—முதல்வருஷத்தைப்போல முதலடி எள்; தாளடி சோளமும் பருத்தியும்.

இப்படிச்செய்தால் நான்குவருஷத்தில் ஒருநிலத்தில் ஒருபயிர் ஒரு முறைதான் சாகுபடியாகும்; நிலத்திலுள்ள பயிருணவுப் பொருட்கள் செட்டாய்ச் செலவாகிவரும்; மாசூலும் தாழ்வில்லாமல் கிடைத்துவரும். வெகுகாலத்துக்கு நிலமானது வளங்குறையாமலிருக்கும். இதை வெகு ஜாக்கிறதையுடன் கிருஷிகர் அனுஷ்டிக்கவேண்டும்.

ஆனால் சில கிருஷிகர் இப்படி பயிர் மாற்றுதல் என்னும் முறையை நன்செய் நிலங்களில் அநுஷ்டிக்க முடியாது என்று சொல்வார்கள். அதற்கு சமாதானமும் வழிகளும் அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம். ஆனால் புன்செய் நிலங்களில் பயிர் மாற்றுதல் செய்ய ஒருவரும் ஆக்ஷேபணை சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறோம். தென் ஆர்க்காடு ஜில்லாவில் தற்காலத்தில் கிருஷிகருக்குக் கிடைக்கும் சுவல்ப பணலாபத்தைமட்டும் உத்தேசித்து புன்செயில் அதிக விஸ்தீரணத்திலும், சிலவிடங்களில் நன்செய்களிலும் மணிலாக்கொட்டையை இடைவிடாமல் சாகுபடி செய்து வருகிறார்கள். தொடர்ச்சியாய் அனேக வருஷங்களுக்கு இந்தப் பயிரையே சாகுபடி செய்வதால் இப்போது வரவர முன்போல் அதிகமான மேனி கிடைப்பதில்லையென்பது அக்கிருஷிகருக்குநன்றாய்த்தெரியும். நிலத்தின் வளம்குறைவதால் இப்படி நேரிடுகிறது. ஒரே தினிசான பயிருணவே வருஷா வருஷம் செலவாகிக் கொண்டு வந்திருக்கிறது. ஆகையால் கிருஷிகர் ஒருவருஷம் அல்லது இரண்டு வருஷங்களுக்கு அந்நிலங்களில் கதிர் தானியப்பயிர்களில் இலாபமுள்ளதை சாகுபடிசெய்து பார்ப்பார்களானால், நிலவளம் அதிகப்பட்டு பயிர்களின் விளைவும் அதிகமாகும். "ஆடிப்பட்டம் தேடிவிதை" யென்றபடி ஆடி ஆவணி மாதங்களில் புன்செய் சாகுபடி ஆரம்பிப்பார்களாகையால் முன் கூட்டியே கிருஷிகர் இவ்விஷயத்தை நன்றாய் யோசித்துணர்ந்து அநுகூலமடைய முயலவேண்டும் என்பது நமது கோரிக்கை.

சோளப்பயிர் தின்றுமாடுகள் சாகுதல்

SORGHUM POISONING

BY

Mr. V. P. SUBRAMANIA MUDALIAR, G. B. V. C.

Veterinary Inspector

சோளப்பயிரை அதிகமாக மேய்ந்து குதிரைகளும் மாடுகளும் இறந்திருக்கின்றன. இவ்வாறு மரணம் அடைவதற்குக் காரணம், அதிகமாக மேய்ந்த பச்சைத்தட்டை பதனழிவதனல் உண்டாகும் துர்க்காற்றினுல் வயிறு உப்புவதுதானென்று மிருகவயித்தியர்கள் முன்காலத்தில் எண்ணியிருந்தார்கள். பின்பு இந்தியாவில் வந்திருக்கும் ஐரோப்பிய மிருகவைத்தியர்கள் ஷெ சோளத்தட்டையில் வெடியுப்பு மிகுதியாயிருப்பதைக் கண்டுபிடித்து அந்த உப்பினுல் வியாதியும் மரணமும் உண்டாவதாகக் கருதினுர்கள். ஆயினும் சோளத்தட்டை மேய்ந்து உண்டாகும் மரணம் வெகு சீக்கிரமாக நேரிடுவதினுலும் வெடியுப்பு அற்ப விஷகுணமேயுடையதா யிருப்பதனுலும் சோளத்தட்டையிலுள்ள வெடியுப்பு மரணத்துக்குக் காரணமாயிராதென்று கொள்ளப்பட்டது.

இப்பால் இந்தியா கவர்ன்மெண்டாரது இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டில் உள்ள சாஸ்த்திரிகள் சோதனை செய்ததில் இளஞ்சோளப்பயிரில் ப்ரஸ்ஷிக் ஆசிட் (Prussic acid) என்ற கொடிய நஞ்சிருப்பதாகவும் அதனல் மேற்கண்ட சடுதி மரணங்கள் நேரிடுகின்றனவென்றும் கண்டுபிடிக்கப்பட்டது. சோளப்பயிர் செய்து அஞ்சு வாரமுதல் எழுவாரத்துக்குட்பட்ட காலத்தில் ஷெ நஞ்சு அபாயகரமாக மிகுந்திருக்கிறது. ஷெ பயிர்பூத்துச் சிறிது காலத்துக்குள் ஷெ நஞ்சுபடிப்படியாகச் சீக்கிரம் குறைந்து காணுமற்போய்விடுகிறது. கதிர் முற்றியசமயத்தில் ஷெ நஞ்சு—சிறிதும் காணப்படுவதேயில்லை. தவிர, சோளத்தட்டை வெட்டிக் காய்ந்தபின்னும் காணுமற்போய் விடுகிறது. இந்த நஞ்சு (சாராயம்போல்) ஆவியாய் மறைந்துபோகும் குணமுள்ளதாதலால் தட்டை காயும்போது ஆவியாய்ப் போய்விடுகிறது.

ஷெ நஞ்சு வறண்டகாலத்துச் சோளப்பயிரில் மிக் அதிகமாயிருக்கிறது. மிகவும் ஈரமுள்ள நிலத்தில் வெகு சீக்கிரமாக வளரும்பயிரில் ஷெ நஞ்சு காணப்படுகிறதில்லை. வளர்ச்சி தடைபட்டுக் குன்றிய பயிர்களில் அது அதிகமாயிருக்கிறது. வெட்டப்பட்ட சோளத்தட்டையிலிருந்து திரும்பக் கிளைக்கும் பயிரிலும் அதிகமாயிருக்கிறது. பெருவெள்ளைச்சோளம் சின்னவெள்ளைச்சோளம் நாற்றுச்சோளம் முதலிய சகலவகைச் சோளப்பயிரிலும் ஷெ நஞ்சு காணப்படுகிறது.

சோளப்பயிர் மேய்வதனல் நஞ்சுக்குணம் உண்டாகாமல் தடுப்பதற்குப் பின்வரும் விதிகளை அநுசரிக்கவேண்டும்.

1. எந்தவகைச் சோளப்பயிருள்ள இடத்துக்கும் கால்நடைகள் கிட்டப்போகாமல் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டும்.

2. சோளப்பயிர் இளமையாயிருந்தாலும் முதுமையாயிருந்தாலும் அதை வெட்டிய உடனே, தட்டைகளைக் கால்நடைகள் மேயவிடப்படாது. வெட்டியதட்டை ஒருநாள் இரண்டுநாள் காய்ந்த பின்பு தீவனத்துக்கு உபயோகிக்கலாம்.

3. அரைகுறை வளர்ச்சியாயிருக்கிற சோளப்பயிரில் கால்நடைகளை மேயவிடவே கூடாது. சோளப்பயிர் பச்சையாயிருக்கும்போது கால்நடைகளை மேயவிடப் பிரியமிருந்தால், அந்தப்பயிர் பூத்தபின் கதிராயிருக்கும் சமையத்தில் மேயவிடலாம்.

4. மிகுந்த ஈரமுள்ளநிலத்தில் விரைவாயும் செழிப்பாயும் வளர்ந்துகொண்டிருக்கும் சோளப்பயிரையும் கால்நடைகள் மேயலாம். புன்செயில் மழைக்குறைவினல் வளர்ச்சி தடைபட்டுக் கரண்ட சோளப்பயிர்த்தட்டைகள் நன்ருகக் காய்ந்தபின்புதான் தீவனமாக உபயோகிக்கப்படவேண்டும்.

5. சோளத்தட்டையை அளவுக் கதிகப்படாமலும் மற்றைத் தீவனத்தோடு கலந்தும் கொடுக்கவேண்டும்.

பரிகாரம்.—சோளப்பயிர் தின்ற கால்நடைகள் வெகு சடுதியாக இறப்பதனல் வயித்தியஞ் செய்வது துர்லபம். ஆயினும் அவைகளை லிக்கர் அம்மோனியா போர்ட்டியார் என்ற ஜலரூபமான மருந்தைத் தொடுத்து சுவாசித்து உட்கொள்ளும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்வதோடு ஆக்கிராண உப்பு என்ற அம்மோனியம் கார்போனேட்டு மருந்தை ஒருவேளைக்கு மூன்று ரூபாயெடை அளவு குளிர்ந்தஜலத்தில் கரைத்து ஒருமணிக்கொருதரம் கொடுக்கவேண்டும். மேலே கூறிய அளவு மாட்டுக்குக் கொடுக்கும் அளவு; குதிரைக்கு அந்த அளவில் பாதி கொடுக்கவேண்டும். ஆட்டுக்கு நாலில் ஒருபங்கு. ஷெ ஆக்கிராண உப்புக் கைவசம் இல்லையானல் அதற்குப் பதிலாக பேக்கிங்கு ஸோடா (Baking Soda) என்ற சாதாரணமாகக் கிடைக்கும் மருந்தை உபயோகிக்கலாம். ஆனல் இது ஆக்கிராண உப்பைப்போல அவ்வளவு பிரயோசனமானதல்ல.

திருச்சி விவசாய சங்கம்

TRICHY AGRICULTURAL ASSOCIATION

திருச்சினப்பள்ளி ஜில்லா விவசாய சங்கத்தில் தென்பாகம் டிப்டி டைரெக்டர் ஆன மெஸ்தர் சாம்ப்ஸன் துரையவர்கள் சென்ற

மார்ச்சுமீ 27-தேதியில் ஓர் உபந்நியாசம் செய்தார். அதிலடங்கிய முக்கியவிஷயங்களாவன: சர்க்காரில் அதிகமாகப் பொருள் செலவு செய்து விவசாய விர்த்திக்காக அநேக உத்தியோகஸ்தர்களை நிய மித்திருக்கிறார்கள். விவசாய சம்பந்தமான அநேக தொழில்களி லும் சாஸ்திரங்களிலும் பயிர்ச்சி யுண்டாக்குவதற்காகக் கோயம்பும் தூரில் ஒரு கலாசாலை ஏற்படுத்தியிருக்கின்றனர். விவசாய சம்பந் தமான அநேக விஷயங்களில் நூதனமுறைகளைப் பரீக்ஷிப்பதற் காக அநேக இடங்களில் பரீக்ஷைப் பண்ணைகளையும் ஸ்தாபித்து ஆங்காங்கு உழைத்தும் வருகின்றனர். இப்படி சாதாரண கிருஷி கரால் நடத்திவரமுடியாத பல அருமையான காரியங்களை சர்க்கா ரில் செய்துவருவது கிருஷிகருக்கு உபகாரப்படும் பொருட்டே யாயினும், அப்படி சர்க்காரில் கண்டுபிடிக்கப்பட்ட அநேக அறிய பெரிய விஷயங்கள் சாதாரண கிருஷிகருக்குத் தெரியும்படியாய் விளக்கிக் காட்டவேண்டியது அந்தந்த ஜில்லாக்களில் ஸ்தாபிக் கப்பட்டிருக்கும் விவசாய சங்கங்களின் முக்கிய கடமையாம். விவ சாய இலாகாதாரரால் பரீக்ஷைசெய்து கண்டுபிடிக்கப்பட்ட அநேக விசேஷப் பழக்கங்களை சாதாரண கிருஷிகர் அனுஷ்டிக்கவேண்டிய தற்கான முயற்சிகளை விவசாய சங்கங்களே செய்துவரவேண்டும். என்றாலும் தற்காலத்தில் விவசாயசங்கங்கள் இவ்விஷயத்தில் வேண் டிய முயற்சிகளை சரியானபடி செய்து வரவில்லை. ஆகையால் விவ சாயசங்கங்களில் மெம்பர்களைச் சேர்ப்பதில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். விவசாய சங்கங்களின் மெம்பர்கள் "கிருஷிமெம் பர்கள்" என்றும் "நிருபமெம்பர்கள்" என்றும் இரண்டு பிறிவாய் இருக்கவேண்டும். இவர்களில் "கிருஷிமெம்பர்கள்" தற்காலத் தில் 12-க்கு அதிகப்படக்கூடாது. அவர்கள் எல்லாரும் கவனத்து டன்சொந்தவிவசாயம் செய்பவர்களில் கல்வியறிவுள்ள கிருஷிக ராயிருப்பதுடன் ஜில்லாவின்பற் பல பாகங்களிலு மிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட வர்களாயு மிருக்கவேண்டும். இந்த வகை மெம்பர்கள் சந்தா யாதொன்றும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் இவர்கள் தங்களுக்கும் மற்ற கிருஷிகருக்கும் உபயோக மாயிருக்கும் சிலநூதன முறைகளை விவசாய இலாகாதார்சொல் லும் விதமாய் நடத்திவரக் கூடியவர்களா யிருக்கவேண்டும். இப் படி தெரிந்தெடுக்கப்பட்ட எல்லா மெம்பர்களும் தங்களுக்கு விவ சாய விஷயங்களில் யோசனை சொல்லவேண்டிய விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு நன்றாய்த் தெரிந்தவர்களாயு மிருத்தல் வேண்டும். இந்த மெம்பர்களை கலெக்டர் டிவிஷனல்ஆபீஸர் தாசில் தார் முதலான ரெவினியு இலாகா உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக் கவேண்டும். இப்படி தெரிந்தெடுக்கப்பட்ட விவசாயமெம்பர்களின் ஸ்திதி யெப்படிப்பட்டதென ஒரு விவசாய இலாகா உத்தியோகஸ்

தர் இந்த கிருமங்களுக்கு நேரில் சென்று கவனித்து வந்தபின் இவர்களை மெம்பர்களாய்ச் சேர்க்கவேண்டும்

"நிருபமெம்பர்கள்" என்று சொல்லப்பட்டவர்கள் இதர பிரவர்த்தி யுள்ளவர்களானாலும் விவசாய விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றும் பிராந்திகொண்டவர்களாயும், விவசாய விஷயத்தில் சம்மந்தமுடையவர்களாயு மிருப்பவர்கள். இவ்வகுப்பில் சேர்ந்தஅநேகர் தற்காலத்தில் மெம்பர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு அப்போதைக்கப்போது வெளியாகும் விவசாய சம்பந்தமான பத்திரிகைகளைக் கொடுத்து வாசிக்கச் செய்யவேண்டும். அவர்கள் வருஷசந்தா ரூ. 2 கொடுக்கவேண்டும். இவ்விரண்டுவகுப்புமெம்பர்களைத் தவிர, கலெக்டர் அக்கிராசனாதிபதியாகவும், டிவிஷனல்ஆபீசர்களும் விவசாய இலாகா உத்தியோகஸ்தரும் கௌரவமெம்பர்களாகவு மிருக்கவேண்டும். கிருஷிமெம்பர்களின் சபை வருஷத்துக்கு இருமுறை கூட்டப்படும். அதில் எல்லா கிருஷிமெம்பர்களும் கலெக்டரும் மற்ற உத்தியோக மெம்பர்களும் ஆஜராயிருக்கவேண்டும். அப்படி கூடும் சபையில் ஒவ்வொரு கிருஷிமெம்பரும் அவ்வருஷத்தில் நடத்திக்காட்டவேண்டிய நூதன விவசாய முறைகளின்னின்னவென்று ஆலோசனை செய்து குறிப்பிடப்படும். அடுத்துக்கூடும் சபையில் ஒவ்வொரு கிருஷி மெம்பர் தான் நடத்திய பரீக்ஷையின் பயன் என்னவென்று எழுத்து மூலமாய்த் தெரிவித்துக் கொள்ளவேண்டும். இந்த விவரங்கள் எல்லா மெம்பர்களுக்கும் தெரிவிக்கப்படும். விவசாய சங்கத்தின் எல்லா மெம்பர்களும் கூடிய மஹா சபை வருஷம் ஒருமுறை கூடவேண்டும் அதில் முன்சொன்ன ரிப்போர்ட்டுகளெல்லாம் வாசிக்கப்படும். இவ்விதமாக சங்கத்தின் நிருப மெம்பர்களுக்கும் கிருஷி மெம்பர்களால் செய்யப்பட்ட நடவடிக்கைகள் முழுதும் வெளியாகும். மேலும் அந்தந்த ஜில்லாவின் விவசாயப் பழக்கங்களை நன்கறிந்த அநேகர் அவ்விஷயங்களை விவசாய இலாகா உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்து அவர்கள் மூலமாய் அம்முறைகளின் அநுகூலப் பிரதிகூலங்களை பரீக்ஷித் தறியக்கூடிய ஹேதுவு முண்டாகும்.

திருவாங்கூர் விவசாயக் காக்ஷி

AN AGRICULTURAL EXHIBITION IN TRAVANCORE

திருவாங்கூர் சமஸ்தானத்தின் வடபாகத்திலுள்ள திருவெள்ளாவுக்கு சமீபத்திலிருக்கும் பாருமலா என்னும் ஊரில் சென்ற மேமீ 14-தேதிமுதல் 18-தேதிவரை ஒருவிவசாயப்பொருட்காக்ஷி வைக்கப்பட்டது. 14-தேதி மாலையில் கால்நடைச்சந்தை கூடிற்று. அங்கே அனேக நிலச்சுவான்களும் கிருஷிகரும் வக்கில்களும் வந்

திருந்தனர். காக்ஷிக்கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியான ம-ா-ா-ஸ்ரீ K. பல்பு பிள்ளையவர்கள் அங்கு கூடின எல்லாருக்கும் நல்வரவு கூறினார்கள். அந்தக்காக்ஷிக்குத்தலைவராயிருந்த டாக்டர் குஞ்சன் பிள்ளையவர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிப்பேசினது மல்லாமல், விவசாயவிர்த்தி விஷயத்திலும், கைத்தொழில்களைப்பற்றியும் பேசினார்கள். ஜப்பான்தேசம் வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வந்ததென்றும் நமது தேசமும் முன்னுக்கு வரக்கூடிய மார்க்கங்களுண்டென்றும் சொன்னார். கரும்புசாகுபடியாகும் ஜில்லாக்களில் சர்க்கரையுண்டாக்கும் இயந்திரங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்பினார். பூர்வத்தில் இந்தியா தேசத்திலிருந்துஅயல் தேசங்களுக்கு சர்க்கரை ஏற்றுமதியாகிக்கொண்டிருந்ததென்றும் தற்காலத்தில் நமதுதேசத்தில் செலவாகும் வெள்ளைசர்க்கரை முழுவதும் அயல்தேசங்களிலிருந்து இறக்குமதியாகிற தென்றும், இதைக்கூடிய சீக்கிரத்தில் நிவர்த்திக்க முயலவேண்டுமென்றும், கரும்பு சாகுபடியை அதிகமாய்விர்த்திசெய்து சர்க்கரைகாய்ச்சி சுத்திசெய்யும் சாலைகள் அதிகமாக ஸ்தாபிக்க முயலவேண்டு மென்றும் சொன்னார்.

கடிதம்

CORRESPONDENCE

My Dear Ranga Raju Garu,

தங்களுடைய மூன்று மாதங்களின் "கிருஷிகன்" பத்திரிகை கிடைத்தது. கிருஷிகர்களுக்கு நிரம்பவும் குணகரமாயுள்ள இந்தப் பத்திரிகையை எல்லாரும் வாங்கிப்படித்து பிரயோஜன மடைவார்களென நம்புகிறேன். இப்போது மதுரைஜில்லா வில்லாபுரம் கிராமத்தில் என்னுடைய நிலத்திலும் இன்னும் அநேக அயல்நிலங்களிலும் சென்ற சித்திரைமாதத்தில் கரும்பு கிருஷிசெய்திருந்ததில், இப்போது கரும்புகளில் விட்டில் (Locust) என்னும் ஒருபுழு விழுந்து கரும்புகளைக் கடித்துத் துண்டித்து நாசமாக்கியிருக்கிறது. அதற்குப் பரிகாரம் என்ன செய்யவேண்டியது என்பதை அடுத்த பத்திரிகையில் எல்லாஜனங்களுக்கும் தெரியும்படி பிரசுரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவில் நன்செய் நிலங்களில் தைமாதத்தில் நெல் அறுப்புக்கு 10,15 நாளுக்குமுன்னதாக 'வயல் உழுந்து' என்ற ஒருவகை உழுந்தை விதைத்து, நெல்அறுவடைகாலத்தில் நன்றாக மிதிபட்டு நெல் மாசூல் எடுத்தபின் இரண்டரை மாதத்தில் நீர்பாய்ச்சாமல் அந்த ஈரத்தில்தானே விளைந்து நல்லமாசூல் கிடைப்பதாகக் கேள்வி. அதன் வரலாறும் அந்த

விதை எங்கே கிடைக்குமென்பதையும் அடுத்த சஞ்சிகையில் பிரஸ்தாபித்தால் தேவையில்லை. தங்களிஷ்டன்,

Subscriber, G. N. KRISHNA RAO.

நமது நண்பரவர்கள் பிரஸ்தாபிக்கும் விட்டில் (Locust) கரும்புப்பயிருக்குக் கெடுதிசெய்ததாக இதுவரை நாமாவது கரும்பைப்பற்றி அனுபோகமுள்ள மற்றவர்களாவது பார்த்திருப்பதில்லை. கரும்புப்பயிருக்கு அநேகவித நோய்களும் பூச்சிகளினல் உண்டாகும் கெடுதியும் உண்டென அறிவோம். அவைகளைப்பற்றி விவரமாய்ப் பின் வெளியிடுவோம். விட்டில் கரும்புக்குக் கெடுதிசெய்ததாக இதுவரை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லையாதலால், ஒருவேளை நமது நண்பரவர்கள் எழுதியிருக்கும் விஷயம் முற்றிலும் சரியோ எனச் சந்தேகங்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. அப்படி சரியாயிருக்குமாகில் இதுவரையில் கிருஷி இலாகா உத்தியோகஸ்தர் கண்டுபிடிக்காத நூதனப்பூச்சியாயிருக்கவேண்டும்.

பூச்சிகளில் Cane borer என்று சொல்லும் ஒருவித புழு கரும்புக்கோல்களைத் துளைத்துக் கெடுதிசெய்வது. Moth borer என்னும் புழு புதிதாய்த் தழைத்துவரும் கொழுந்தை உள்ளிருந்தே தின்றுவிடுவதால் கரும்புப்பயிர் சரியாய் வளராமல்போவதுடன் தீவாய்க் கரிந்துபோனதுபோல் தோற்றும். இவ்விரண்டு புழுக்களாலேயே கரும்புக்கு அதிகமான கெடுதியுண்டாவது.

இவைகளைத்தவிர கரும்பின் இலைகளைத் துளைத்தும், நறுக்கியும் தின்றும் கெடுதியுண்டாக்கும் பலவிதமான பூச்சிகளுண்டு. ஆனல் இவைகளால் கரும்புக்கோல்கள் அதிகமாய்க் கெடுவதில்லை. இவைகளில் எதுவும் விட்டில்போல் இருப்பதாக நமக்குத் தெரியாது. ஆகையால் நமது நண்பரவர்கள் பிரஸ்தாபிக்கும் விட்டில்களைப் பிடித்து ஒரு சின்னபுட்டியில் (mythilated spirit) என்னும் சாராயத்தைவிட்டு அதில் அந்த விட்டில்களைப்போட்டு மூடி, அவைகள் கெடுதிசெய்திருக்கும் கரும்புகளில் ஒன்றிரண்டையும் சேர்த்து திருச்சினப்பள்ளியிலிருக்கும் விவசாயஇலாகா டிப்டி டைரெக்டரவர்களுக்கு அனுப்பினல் அவர்கள் ஒரு உத்திபோகஸ்தரை அனுப்பி அந்தப்பூச்சிகளின் வரலாற்றைக் கவனிக்கச்செய்து, அவைகளை நிவர்த்திப்பதற்கு ஏற்ற முறைகளைத் தெரிவிப்பார்கள். பூச்சிகள் இன்னதென்று திட்டமாய் அறியாமல் அவைகளுக்குப் பரிகாரம் சொல்லுதல் வைத்தியன் வியாதியஸ்தனைப் பாராமல் சிகிச்சைசெய்வதுபோலாகும்.

அருபதாம் 'உழுந்து' என்று பேர் உள்ள ஒருவகையுழுந்து நெல் மாசூல் அறுவடையானவுடன் நன்செய்களில் விதைக்கப்படுகிறது. தண்ணீர்பாய்ச்சாமல் நிலத்தின் ஈரப்பதத்திலும் பனிப்பதத்திலும் அந்தப் பயிர் உண்டாகி 75-நாட்களில் மாசூல் எடுக்கலாம். தென் ஆர்க்காடு

ஜில்லா சிதம்பரம் தாலூகா வீரசோளன் கிராமத்திலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஆபரணம் பிள்ளையவர்களுக்காவது தஞ்சாவூரிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் ஸ்ரீநிவாசபிள்ளை யவர்களுக்காவது எழுதிக்கொண்டால் இந்த உழுந்துவிதையை அனுப்புவார்கள்.

இந்த உழுந்துப்பயிரில் கிடைக்கும் அற்பமாகுலை அபேக்ஷிப்பதைவிட அதிகமான இலை தழை யுண்டாகக்கூடிய ஒருபயிரை விதைத்து அதைத் தழையெருவாக நிலத்தில் சேர்ப்பது உசிதம் என்பதை முன்னமே இரண்டாவதுபிரதியில் வற்புறுத்தி எழுதியிருக்கிறோம்.

பத்திராதிபர்.

மாதத்திய பருவங்கள்

MONTH'S OPERATIONS

எல்லாவிடங்களிலும் இந்த மாதத்தில்தான் குழிகள் வெட்டி "படர் பயிர்" என்னும் காய்கறிப் பயிர்கள் விதைக்கவேண்டியது. குழிகள் இரண்டடிக்குக் குறையாமல் மூன்றடி ஆழம்வரை தோண்டி குளத்தின் கரம்பை மண்ணையாவது ஆற்றின் வண்டலையாவது கொண்டுவந்து குழிகளில் வெட்டியெடுத்த மண்ணுடன் கலந்து மக்கின தொழுவெருவையும் சேர்த்துப்போட்டுக்குழிகளை நிறப்பி விதைகளை விதைக்கவேண்டும்.

தென் ஜில்லாக்களில் அநேக விடங்களில் வரகும் துவரையும் கலந்து விதைக்கவேண்டிய காலம் ஆடிப்பட்டம்தான்.

தென் ஆற்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்காவிலும் கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஜில்லாக்களிலும் ஒருபோக நன்செய் நிலங்களில் நடுகை செய்வதற்கு நாற்றங்கால்களில் நாற்றுவிடவேண்டியகாலம் இப்போதுதான் — நடவேண்டிய நிலங்களை முன் கூட்டியே உழுது சேறுக்கிச் சேர் அழுகும் படியாய் இடையிடையே உழுது பரம்படித்து வைக்கவேண்டும்; சிலவிடங்களில் நடுகைசெய்வதற்கு ஒருவாரத்துக்குமுன் 2,3 உழவு உழுது நட்டுவிடுகிறார்கள். இது சரியல்ல. முதல் தரிசு உழவு செய்து தண்ணீர் கட்டி ஒருவாரங்கழித்து மறுஉழவு செய்யவேண்டும். இப்படி நான்குவாரமாக நான்கு உழவு செய்தபின் நடுகைசெய்யலாம். கோயம்புத்தூர், தாராபுரம் தாலூகாக்களில் அங்நதானம் நெல் சாகுபடிசெய்வார்கள். சத்யமங்கலம் தாலூகாவில் தேவராயன் சம்பா அடுத்தமாதம் நடவேண்டியதற்காக இப்போதே உழவு முதலிய பருவங்களைச் செய்வார்கள் ; கரூர்தாலூகாவில் குருவைநெல் சாகுபடிசெய்வார்கள்.

தென்ஜில்லாக்களில் அநேகவிடங்களில் இந்தமாதம் பாத்திகளில் கேள்வரகு நடுவார்கள். அப்படி பாத்திகளில் நடுவதைவிட நிலத்தில் தண்ணீர்பாயும் சிறுகால்களும், பக்கத்தில் மேடுகளாயும் செய்து அந்தமேடுகளில் கேள்வரகுநாற்று நட்டால் அதில் அதிகமானபலன் அடையலாம். கொ

ஞ்சவிஸ்தீர்ணத்திலாவது கிருஷிகர் இந்தமுறையைப் பரீக்ஷித்துப்பார்க்கலாம்.

கோயம்புத்தூர் முதலான தென்ஜில்லாக்களில் பெரிய மஞ்சள்சோளம் விதைப்பதற்கு இப்போது நிலத்தை உழுது தயார்செய்யவேண்டும். அநேக விடங்களில் இந்தமாதம் கம்புப்பயிர் விதைக்கலாம்.

செங்கற்பட்டு ஜில்லாவில் மாணவாரிக்குளங்களின் ஆயக்கட்டு நன்செய்களில் சிறுமணி, நீலன்சப்பா வாடன்சம்பாமுதலான நெல் தினிசுகளை மழைப்பதத்தில் விதைக்கவேண்டியகாலம் இதுதான். முன் கூட்டிவிதைத்துப் பயிரானால்தான் அற்பசி கார்த்திகை மாதங்களில் பெய்யும் மழைகள் அப்பயிர்களுக்கு சரியானபடி உபயோகமாகும். இப்படி மழைப்பதத்தில் விதைத்த நெல்பயிர் அநேகவருஷங்களில் புரட்டாசி மாதத்தில் மழையில்லாமல் போவதால் தீய்ந்துபோக நேரிடுகின்றது. நிலங்களை இரும்புக் கலப்பைகொண்டு ஆழமாய் உழுது நெல்விதைத்தால் அந்தநிலங்கள் நெடுநாளைக்கு ஈரங்காத்து வெயில்தாங்கும். மற்ற நிலங்களிலுள்ள பயிர்கள் பட்டுக் கரிவாகும்போது, ஆழ உழுத நிலத்திலிட்ட பயிர் பச்சென்றிருக்கும். கொஞ்ச விஸ்தீரணத்திலாவது கிருஷிகர் இதைப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

மொச்சை காராமணி முதலிய பயறுவகைகள் விதைப்பதற்கும் இது தக்ககாலம். தனிப்பயிராகவாவது, கேள்வரகு சோளம் முதலிய பயிர்களுடனாவது கலந்து சாகுபடி செய்யலாம். இதேவிதமாக ஆமணக்கு (முத்துக்கொட்டை)ப் பயிரும் இந்தமாதம் விதைக்கலாம்.

தென்னார்க்காடு ஜில்லாவில் இந்தமாதம் மணிலாக்கொட்டை (நிலக்கடலை) கம்பு, தினைமுதலிய பயிர்களைச் சாகுபடி செய்வார்கள்—மணிலாக்கொட்டை சாகுபடியை அதிகமாய்ச்செய்வதை மட்டுப்படுத்தி உணவு தானியங்களை அதிகமாய் சாகுபடிசெய்வது நலமாயிருக்கும். கோயம்புத்தூர் முதலிய தென்ஜில்லாக்களில் அநேகவிடங்களில் இந்தமாதமும் மிளகாய்ப் பயிர் நடுகைசெய்வார்கள்.

வடஆர்க்காடு (சித்தூர்) ஜில்லாவில் 6 மாதத்தில்விளையும் கார்நெல் இந்தமாதம் சாகுபடியாகும். இந்தஜில்லாவில் சாரல் மழைகளின் உபயோகம் அதிகமாதலால் இக்காலத்தில் 6 மாதத்துப் பயிரை சாகுபடிசெய்வது அவர்களுக்கு சுலபமாயிருக்கிறது. இந்தஜில்லாவில் மக்காச்சோளம் இந்தமாதத்தில் விதைப்பார்கள். இந்தப்பயிர் வெகுசீக்கிரத்தில் அதிகமான எருச்சத்தை உண்டுவிடுமாதலாலும், அதிசீக்கிரத்தில் வளர்ந்து பலன்தருவதானதாலும், அதைப் பாத்திகளில் விதைக்காமல் மேடுகளில் விதைக்கவேண்டும். அப்படிச்செய்தால் விதைபோடும் இடத்தினடியில் அப்பயிருக்கு வேண்டிய எருவை வைக்கமுடியும். இதனால் இப்பயிருக்கு எருவிடச் செலவும் செலவு சுருக்கமாவதுடன், பயிருக்கு அவசியமான அளவு எரு ஒவ்வொரு செடிக்கும் சமீபத்தில்கிடைக்கும்,

குறிப்புகள்

NEWS AND NOTES

இந்தராஜதானி விவசாய இலாகா டைரெக்டர் மெஸ்தர் கௌச்மன் துரையவர்கள் ரஜாவிலிருந்து திரும்பவந்து தம்வேலையை ஒப்புக்கொண்டதைக் கேட்க மெத்த சந்தோஷப்படுகிறோம். இவ்விராஜதானியின் கிருஷிகருக்கு இந்தக் கனவானல் உண்டாகும் நன்மைக்கு அளவில்லை.

*
* *

கோயம்புத்தூருக் கருகிலிருக்கும் அநேக கிருஷிகர் இவ்வருஷம் மீன் எருவை உபயோகித்துக் கேள்வரகு பயிர்செய்ய ஏற்பாடு செய்து வருவதாய்க் கேட்டு சந்தோஷிக்கிறோம். பம்பாய் இராஜதானியில் அநேக பாகங்களில் கேள்வரகு முதலிய பலபயிர்களுக்கு மீன்எருவை உபயோகித்து லாபமடைகிறார்கள். கடல் கரை ஜில்லாக்களிலிருக்கும் குடிகளுக்கு மீன் எரு சாதாரணமாய்க் கிடைக்கும். அவர்களெல்லாம் இதை உபயோகித்துப் பலனடைவார்களென நம்புகிறோம்.

*
* *

சென்ற வைகாசிமாதத்தில் பெய்த அதிக மழையினல் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள அநேக கிருஷிகர் பிரயோஜனமடைந்தார்களென்றாலும், பருத்திப்பயிருக்கு அதினல் கெடுதியுண்டாயிற்று. செடிகளில் காய்கள் நிறைந்திருந்தனவாயினும், அவைகள் சரியாய் வெடிக்கவில்லை. வெடித்த காய்களிலுள்ள பஞ்சும் மழையினல் நிறங்கெட்டுப்போச்சுது. கோடைக்காய்ப்பில் சரியானபடி பயனடையலாம் என்றெண்ணியிருந்த கிருஷிகருக்கு இம்மழைகள் கெடுதிசெய்தன.

*
* *

திருச்சினப்பள்ளி ஜில்லாவில் ஸ்ரீரங்கத்துக்கும் எலமனூருக்கும் இடையேயுள்ள காவேரிநதி தீரத்து நன்செய்களில் இவ்வருஷம் தழையெருவுக்காக அவுரிப்பயிர் சாகுபடி செய்திருப்பதைப் பார்க்க அதிக சந்தோஷப்படுகிறோம். நன்செய்களில் எள் சாகுபடிசெய்து நிலத்தைக் கெடுக்கும் மற்றவிடத்திலுள்ள குடிகள் இம்முறையை அநுஷ்டித்தால் மெத்த நலமுண்டாகும்.

*
* *

தஞ்சாவூரில் அநேகவருஷங்களாக விவசாயச் சீர்திருத்தங்களை அதிக ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் நடத்திவரும் ம-ா-ா-ஸ்ரீ, ஆபிரஹாம் பண்டிதரவர்களுக்கு இந்தியா கவர்ண்மெண்டார் ராவ்சாஹிப் என்னும் கௌரதபட்டம் அளித்ததற்காக நாம் சந்தோஷிக்கிறோம். சுயநலங் கருதாமல் பரோபகாரார்த்தமாய்ப் பாடுபடும் இக்கனவானுக்கு இதைவிடச் சிறந்தபட்டம் கிடைக்கும்படி கடவுள் அருள்புரிவாராக.

"Rajambal"

கேட்ட உடன் சந்தோஷத்தையும்,

பார்த்த உடன் ஆநந்தத்தையும்,

வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்

முடித்த உடன் வியப்பையும்,

கொடுக்கும் நாவல் எது?

"இராஜாம்பாள்"

என்னும் துப்பு அறியும் நாவல்
ஒன்றுதான்.

கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரபடங்களுடன்
கூடியது.

விலை அணு **12.**

தபால் கூலி வி. பி. கமிஷன் அணு **2.** பிரத்தியேகம்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்

Which is the best food for Infants and Invalids?

Watch and see.

குழந்தைகளுக்கும் பலஹீனர்களுக்கும் சிறந்த ஆகாரமெது?

கவனித்துப்பாருங்கள்.

No More Cholera.

உயர்ந்த நான்கு தங்கப்பதக்கங்களும், முதல்தரமான அநேக யோக்யதா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன

காலரா (வாந்திபேதி) இனி இல்லை !

மரணங்களுமில்லை !

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி, பண்டித டி. கோபாலாசார்யர் எ.வி.எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார்செய்யப்பட்ட:—

கற்பூராத்யரிஷ்டமும், விஷஉசிஸஞ்சீவினி மாத்திரைகளும்

இவை காலரா என்னும் வியாதியைத்தடையின்றி நிர்மூலமாக்கும், இம்மருந்துகள் பல்லாயிரம் மனிதரை மரணத்தினின்றும் காப்பாற்றின. இம்மருந்துகளின் முக்கியமான மகிமை யென்னவெனில் :—

1. க்ஷணத்தில் வாந்திபேதியை நிறுத்தி அதனாலுண்டாகும் துர்க்குணங்களையெல்லாம் போக்கும்.

2. ஜன்னியைக்கொஞ்சமும் தலையெடுக்கவொட்டாது.

3. சரீரத்தில் உஷ்ணத்தைக் காப்பாற்றி தேகத்திற்கு சீதளத்தை வரவொட்டாமற்செய்யும்.

4. மூத்திரத்தைத் தடையின்றி வரச்செய்யும்.

5. வியாதி எந்த ஸ்திதியிலிருந்தபோதிலும் குணத்தைக் கொடுக்காமற்போகாது.

உங்களுடைய மித்திரர்களையும், பந்துக்களையும் பிராணாபாயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு முதலில் ஒரு புட்டியாவது இதை சங்க்ரஹித்து உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விஷயத்தில் எங்களுக்கு அனேகமாயிரம் யோக்கியதாபத்திரங்கள் கிடைத்திருக்கின்றன

கற்பூராத்யரிஷ்டம் } விலை அணா 12.
விஷஉசிஸஞ்சீவினி }

போஸ்டேஜ் பாகிங் முதலிய சிலவு பிரத்தியேகம்.

ஆயுர்வேதாச்சிரமம்,
44, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை,

டெலிக்ராம் அட்றஸ்
"பண்டிட்" மட்றஸ்.

N. B:—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனாமயனுப்பப்படும்.

P. SUBBA ROY'S
Wonderful Auyurvedic Wedicines.
பி. சுப்பறுய், பரங்கிப்பேட்டை,
தென்னூற்காடு ஜில்லா.

தயவுசெய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி, சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

12. "உரோம சம்ஹார்":—இந்த சூரணத்தை மயிருள்ளயிடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4, 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

13. "சுகந்த பல்போடி":—நல்ல ஜீரணசக்தியைத் தரும். பல் வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3, வி. பி. செலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

14. "ஸ்கலிதரக்ஷணி":—பலஹீனத்தாலும், உஷ்ணத்தினாலும் சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும் தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகதிடத்தைத் தரும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையிலும் அணா 5 பிரத்தியேகம்.

15. "உயர்ந்த கஸ்தூரி":—மிகவும் நேர்த்தியானதும், முதல்தர மானதும், காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மி டத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. 1 ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேமா கும்.

16. "தேள்கொட்டின மருந்து":—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால் தக்ஷணமே விஷமிரங்கி வருத்தப்பட்டு சகிக்கமுடி யாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆன ந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள் வரையிலும் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

"முக்கிய குறிப்பு":—ஒரே தடவையில் 12 சீசாக்களுக்குக் குறையா மல் வாங்கினால் டஜன் 1-க்கு 2—8—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம். இக்குறிப்பு தேள்மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17. "மேகரணமருந்து":—இதை வெள்ளைத்துணியில் தடவி ரணங்களின்மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடை வாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி. மேகவெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள் வரை வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

18. "கண்டசுத்தி மாத்திரிரை":—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டுவந்தால் தொண்டைகட்டு, தொண்டை கம்மலை நீக்குவதன்னியில், இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குறலைத்தரும். சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனைநேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும் குறல் கம்மாது. இனிமையான ஓசையைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால்முதலிய செலவு அணு 5 பிரத்தியேகம்.

19. "சுகந்த ஸ்நானப்பொடி".—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அறிப்பு, சொரி, சிரங்கு, கற்றாழைநாற்றம், கைகால் எரிச்சல், மேககாங்கை, சரீரவரக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை, மேகஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனையும் காந்தியும் லக்ஷமீகரமும் ஆரோக்யமு முண்டாகும். அரைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணு 8. வி. பி செலவு அணு 3 பிரத்தியேகம்.

20. "சஞ்சீவிமாத்திரைகள்":—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திகணை முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணு 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

21. "மஹாகோரோஜனை மாத்திரைகள்":— இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்புசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால்மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், மலைசுரம், முறைசுரம் முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணு 10. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

22. "கரப்பானுக்கும் சொரிசிரங்குக்கும் மருந்து":— இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும் சொரி, சிரங்கு, வரட்டுச்சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும் தொந்திரவையும் தருகின்ற எவ்வித கரப்பான்களையும் வெகுசீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணு 8. இந்தியாவிலும், பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பறங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

MURGENA
A Wonderful Nervine Tonic.

மர்ஜீ நா

சரீரத்தில் இருக்கப்பட்ட நரம்புகளை பலஹீனமாக கெட்ட நட வடிக்கையால் கெடுத்துக் கொள்ளுகிறோம்

மர்ஜீநா:—நரம்புகளுக்கு வலிவு உண்டாகத்தக்கது.

மர்ஜீநா:—வயசுசென்றவர்களுக்கு பால்யத்தை உண்டாக்கச் செய்யும்

மர்ஜீநா:—மனுஷர்களை எக்காலமும் பால்யமாகச் செய்யும்.

மர்ஜீநா:—மனுஷனுடைய இந்திரியத்திற்கு வலுவுகொடுக்கும்.

மர்ஜீநா:—இதை சாப்பிடுகிறவர்களுக்கு பிரயோஜனப்படாமல் போகாது.

மர்ஜீநா:—நரம்புகளுக்கும் வலுவு உண்டாகும்.

மர்ஜீநா:—இதை தவிர மேன்மையான டானிக் கிடையாது.

மர்ஜீநா:—இதை சாப்பிடுகிறவர்கள் எல்லாசுகமும் அடையலாம்.

இவ்வியாதிகளெல்லாம் நிவர்த்திசெய்கிறதற்காக நம்முடைய மனஸுக்கு சுகம்கொடுப்பது மர்ஜீநா தவிர வேறே ஒன்றுமில்லை. மேற்கண்ட மருந்து சாப்பிட்டால் 2-மணிக்குள்ளாக அதனுடைய பயன் தெரிய வரும். இந்தமருந்தை 15-நாள் விடாமல் சாப்பிட்டால், அவர்களுடைய சரீரத்தைப்பற்றி வேரேஸ்ரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

மர்ஜீநாவை சாப்பிட்டு யிருக்கிறவர்களுடைய திரேக சௌக்கியத்தையும் பலத்தையும் அவர்களால் சொல்லத்தரமல்ல.

தயவுசெய்து இந்தமருந்தைக்குறித்து உங்களுடைய பந்து மித்திரர்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

விலை ரூபா 3. வி. பி. சார்ஜ் அணா 4.

தயவுசெய்து ரிஜிஸ்டர் நெம்பர் 634 லேபில்மேல் பார்க்கவும்.

எஸ். வி. சுந்தராசாரி, நெ. 31, கச்சாலீஸ்வரர்அக்கிரஹாரம், மதராஸ். இவர் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சோல் ஏஜெண்டு,

ஷா. பகவான்டாஸ் கன்னிலால் அண்டு கோ.,

நெ. 30, ஏகாம்பரேஸ்வரர் அக்கிரஹாரம் தெருவு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

New Books for Sale.

மில்டேரி இந்து பாகசாஸ்திரம்.

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோ பிரயாசமும் தேககஷ்டமுமெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவநாள்வரையில் அழியாத தேசவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில்பெரும்பாலார் மாம்ஸபக்ஷணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்றாய் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத்தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி அரிசி, டருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம்,மல்கோபாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவ முறைகளும்,துவையல்,ஊறுகாய் வகைகளும்,பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணா 8, வி. பி. சார்ஜ் அணா 3.

விநோதம்வேடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணாகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணா 6, வி. பி. சார்ஜ் அணா 3.

ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண் பெண்முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்ட ஓர் அருமையான கதை.

கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைப்படிக்குந்தோறும் சந்தோஷக்கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறுவார்களென்பது திண்ணம். கதையின் மூலமாகவே பல அருமையான நீதிவிஷயங்களை அற்புதமாயெடுத்துக் காட்டியுள்ளது.

விலை ரூபா 1, வி. பி. சார்ஜ் அணா 4.

ஆசாரத்திரட்டு.—இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம், இந்துக்களாகிய நாம் பிரதிதினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அநுஷ்டானங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் வசனநடையிலச்சிட்டுள்ளது. விலை அணா 4, வி. பி. அணா 3.

மேற்கண்டுள்ள புத்தகங்களைக் கீழ்க்கண்டவருக் கெழுதி வி. பி. மூலமாகவாவது நேராகவாவது பெற்றுக்கொள்ளலாம். தங்கள் முழுவிலாசத்தையும் தெளிவாயெழுதி இந்தபேப்பரின் பெயரையும் கண்டெழுதவும்.

சுகந்த ஸ்நாநப்பொடி

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்துவந்தால் வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், அழுக்குத்தேமல், உடம்பில் நமை, சொறி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேககாங்கை, மேகவூரல், கிரந்திமுதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் நிவர்த்தியாவதன்றி தேகத்தில் சுகந்தவாசனை கமகமவென்று வீசிக்கொண்டே ஆரோக்யமாயிருக்கும்.

டப்பி 1-க்கு அணா 4. 6-டப்பி ரூபா 1-4. 10-டப்பி ரூபா 2.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாஸ்,
நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

சுகந்த பரிமள மூக்குத்தூள்

இச்சுகந்த பரிமள மூக்குத்தூளானது சில மூலிகை மருந்து முதலிய 12-வகை தினுசுகளும் சேர்த்து வெகு பிரயாசையுடன் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு சிட்டிகையையெடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்துவிட்டால் அந்தத்தூள்முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய்விடுவதுடன் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும். ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், நாசியில் துர்நாற்றம் முதலிய வியாதிகளும் இருந்தவிடம் தெரியாமல் பறந்துபோம். அடிக்கடி தூள் போடும்படி தூண்டும் அபேக்ஷையை நீக்கி அவ்வப்பியாசத்தை சிறகச்சிறகத் தாமதப்படுத்தும் குணமும் இதனிடத்துள்ளது. அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் இதை குடும்பஅவிழ்தமாக வைத்து உபயோகித்துவருகின்றார்கள். இவ்வளவு பிரபல்யமுடையதாயும், மேற்கூறிய வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயுமுள்ள ஷை மூக்குத்தூளால் பல சுகுணங்களே நிறைந்துள்ளனவென்று அநுபவத்தில் தெரிந்துகொள்ளலாமேயன்றி நமது மூக்குக்குநேராக நாமே புகழ்ந்துசொல்வதில்பயனில்லை. ஒரு தடவையாகிலும் பரீக்ஷித்துப் பார்ப்பீராக. கிரயம் புட்டி 1-க்கு அணா 4, வி. பி. சார்ஜ் அணா 3. 12-க்கு ரூபா 2—8—0, வி. பி. சார்ஜ் அணா 8.

தந்தசுத்திப் போடி

ஜன்னியினாலாவது சீதளத்தினாலாவது சைத்தியத்தினாலாவது மேகத்தினாலாவது பல் அசைதல், குத்தல், கடுத்தல், பல் நோய், பல்லில் ஈர்கட்டுதல், ஈர்கள் வீக்கம், ஈர்களில் ரணம், பல்லில் சீழ் இரத்தம் வருதல், பல் ஜிலுஜிலுப்பு முதலிய வியாதிகளையுடையவர்கள் இந்த வெண்ணிறம் பொருந்திய பற்பொடியினால் பிரதிதினம் பல் துலக்கிவந்தால் 3-4 தினங்களில் நிவர்த்தியாக்கி ஈறை கெட்டிப்படுத்தி பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஓட்டிவிடும். நெடுநாளாய் அனுபவத்திற்கு வந்தது. 4-5 வயது குழந்தைகளுக்குக்கூட இதை உபயோகப்படுத்தி வழக்கத்தில் கொண்டுவந்தால் ஆயுசுமட்டும் பல்லைச்சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது. பெண்கள் புருஷர்கள் கிழவர்கள் யாவரும் உபயோகிக்கலாம் பல் கறுக்காது. டப்பி 1-க்கு அணா 4. 6-டப்பி ரூபா 1—4. 10 டப்பி ரூபா 2.

கூந்தல்வளர் சுகந்த பரிமளத்தைலம்.

நண்பர்காள்! தாங்கள் அநேகவித கூந்தல்தைலத்தைப் பார்த்தும் உபயோகித்தும் இருப்பீர்களாயினும் இதைப்போல் எங்கும் பார்த்திருக்கமாட்டீர்கள். இத்தைலத்தை உபயோகித்தால் தலைமயிர்கள் மேகம்போலும், நாகப்பழம்போலும் கறுத்து செழிப்பாக வளருவதுடன் தலையின் சுண்டையும் நீக்கிவிடும். மண்டையின் மூளைக்குக் கொதிப்பையும், கபாலவரட்சியையும் நீக்கி மயிர்கால்களுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணி, கண்ணில் நீர்வடிதல், கண் அருகல், கண்எரிவு முதலான நேத்திரரோகங்களை நீக்கி கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையுண்டுபண்ணும். வாங்கி உபயோகித்துப்பார்க்க இதன் பெருமை தெரியும்:

ஆழாக்குதைலமடங்கிய டப்பி 1-க்கு கிரயம் ரூபா 1.

மேகவெள்ளைச் சூரணம்

இது பல காரணங்களினா லுண்டாக்கப்படுகிற மேகவெட்டை, நீர்சுருக்கு, நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழ் ரத்தம் வடிதல் முதலிய வியாதிகள் ஆண் பெண் இருதிறத்தவர்களுக்கும் 10-நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும். டப்பி 1-க்கு அணா விலை 12. 6-டப்பியின் விலை ரூபா 4.

☞ மேற்கண்டுள்ளவற்றை கீழ்க்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், கமலநாயகி மேடிகல் ஹால்,
நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

‘தென்னிந்திய விவசாயம்’

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	பை
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை,

சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பேனி (லிமிடெட்)
திருநெல்வேலி

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெருமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டு மீ முதல் ஷை கம்பெனியில் கிடைக்கும்.

THE SAIDAPET INDUSTRIAL CO., LTD.
SAIDAPET

சைதாப்பேட்டை இண்டஸ்டிரியல் கம்பெனி
லிமிடெட், சைதாப்பேட்டை

60, 50, 40, 30 நெம்பருள்ள வேஷ்டிகளும், புடவைகளும் விலை சரசமாய் கிடைக்கும். துரிதமாய் வேலைசெய்யும் தரிவேலை ஷை கம்பெனியில் எல்லா ஜாதியாருக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மற்ற விவரங்கள் அறியவேண்டியவர்கள் சைதாபேட்டை இண்டஸ்டிரியல் கம்பெனி காரியதரிசி யவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர்பெற்று யாவராலும்
அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு
கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 30. B. V. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்கார்தமல்லாத (Non Magnetic) சர்தார் (Sirdar) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18. **Oxydised** ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத (Non Magnetic) (Lever) லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ.	101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3	8	0
,,	1.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு	7	0	0
,,	104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங் கெடியாரம்	12	8	0
,,	10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும், 15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16	0	0
,,	108.	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20	0	0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக்கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros, at the Guardian Press, Mount Road, Madras.